மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.183/2022</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் 18ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்னுசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>18.09.2025 பி.வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. வாதியின் தாயாரின் தாயார் பெயர் ராமாயி என்றால் ஆமாம். மேற்படி இராமாயி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கோ என் குடும்பத்திற்கோ, என் தகப்பனார் மற்றும் சகோதரர்களுக்கோ பாத்தியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல பாத்தியம் உள்ளது. தாவா சொத்து 1945 ஆம் ஆண்டு கிரைய ஆவணத்தின் படி இராமாயி என்பவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. ராமாயி என்பவர் பெயரில் ஆன கிரய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்க்கவில்லை.

2. நீதிமன்றத்தில் ஆவணத்தை கொடுத்ததால் அதன் நகலை என்னிடம் கொடுத்திருந்தார்கள். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. 1945 வருடத்திற்கு ராமாயி என்பவர் பெயரிலான கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களில் எனக்கு எதன்

அடிப்படையில் பங்கு உள்ளதாக சொல்கிறேன் என்றால் பட்டா உள்ளது. அந்த பட்டா சம்பந்தமாக எழுதப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் எங்கள் பெயரில் இல்லை என்றால் சரிதான். என் தகப்பனார் பெயரில் ரீசர்வேயில் பட்டா மாறிவிட்டதா என்றால் அது எனக்கு தெரியாது ராமாயி அம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து க.ச.எண்.1184/14 உள்ளது என்றால் அது பொய் அதை பொறுத்து என் தகப்பனார் பெயரில் தான் பத்திரம் என் தகப்பனார் பெயர் சின்னப்ப நாடார் க.ச.எண்.1184/14 பூமியை பொறுத்து என் தகப்பனார் பெயரில் எந்த வருடத்தில் ஆவணம் உள்ளது என்றால் பத்திரம் எதுவும் இல்லை 1945 ஆம் ஆண்டு கிரைய ஆவணத்தின் அடிப்படையில் இராமாயி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்துதான் இந்த வழக்கு நடைபெறுகிறது என்றால் 1945 இல் நாச்சிமுத்து நாடார் பெயரில் எந்த கிரையமும் இல்லை.

3. 1959ல் தான் கிரைய ஆவணம் உள்ளது நாச்சிமுத்து நாடார் பெயரில் 1959 ஆம் வருடத்தில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தை நான் பார்த்தது உண்டா என்றால் பார்த்தது இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபன வாக்குமூலத்தில் 1959 ஆம் வருடத்தில் தாவா சொத்தை பொறுத்து நாச்சிமுத்து நாடார் பெயரில் கிரைய ஆவணம் உள்ளதாக குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

4. நான் தான் அதை கொடுத்தேன் என் சகோதரர் எந்த பாத்தியத்தின் அடிப்படையில் இந்த வழக்கில் எதிர்வாதம் செய்து வருகிறார் என்பது எனக்கு தெரியுமா என்றால் என் அப்பா முதலில் இருந்தார், அதற்கு

பின் என் சகோதரர் இருந்து வருகிறார் என் அப்பா பெயரில் பட்டா உள்ளது. மணிவாசகத்தை மணி என்று அழைப்பார்களா என்றால் அது எனக்கு தெரியாது தாவா சொத்தில் உள்ள வீட்டில் உள்ள மின் இணைப்பு எனக்கு தெரியுமா என்றால் என் அண்ணன் வாங்கினார் அது எனக்கு தெரியும். தாவா சொத்தில் எத்தனை மின் இணைப்புகள் உள்ளது என்றால் 2 மின் இணைப்புகள் உள்ளது.

5. அந்த மின் இணைப்புகள் மணிவாசகம் என்பவர் பெயரில் உள்ளதா என்றால் இல்லை மணி பெயரில்தான் உள்ளது க.ச.எண். 1184/14 டி–யில் தான் தாவா சொத்து உள்ளதா என்றால் ஆமாம். க.ச.எண்.1184/14 டி பூமிக்கு தென்புறமாக க.ச.எண்.1170 பூமி உள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. வீட்டிற்கு மேல் புறமாக க.ச.எண்.1184 ஏ பிசி என்ற பகுதி உள்ளது என்றால் முதலில் அங்கு வீடு இருந்தது தற்போது அங்கு எதுவும் இல்லை. க.ச.எண்.1184/14 டி காலியிடமாக உள்ளது என்றால் என் அப்பா காலத்தில் இருந்து அங்கு வீடு உள்ளது. அந்த வீட்டிற்கு என் தகப்பனார் பெயரில் அந்த வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை.

6. அந்த வீடு எப்போது இருந்து உள்ளது என்று நான் சொல்கிறேன் என்றால் சுமார் 60 ஆண்டுகளாக உள்ளது. சுமார் 60 ஆண்டுகளாக அந்த வீட்டிற்கு என் அப்பா பெயரில் வீட்டு வரி எதுவும் ஏற்படவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எப்போது மின் இணைப்பு வழங்கப்பட்டது என்றால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கி இருப்பார்கள் எப்போது என்று எனக்கு தேதி ஞாபகம் இல்லை. நான் சொல்லும் வீடு க.ச.எண்.1184/14

பூமியில் 0.54-1/2 சென்ட் பூமிக்குள் தான் உள்ளது என்றால் இன்னும் அளவீடு செய்யப்படவில்லை அதனால் எனக்கு தெரியாது.

7. க.ச.எண்.1184/14 சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் அது எனக்கு தெரியாது. க.ச.எண்.1184/14 பூமியில் எங்கள் குடும்பத்திற்கும் எங்கள் தகப்பனாருக்கும் எவ்வளவு பரப்பளவு கொண்ட சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்றால் இன்னும் அளவீடு செய்யாததால் அது எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள இரண்டு நீதிமன்ற தீர்ப்புகள் எந்த சொத்துக்களை பொறுத்து ஏற்பட்டவை என்றால் நாச்சிமுத்து நாடார் பெயரில் உள்ள அனைத்து சொத்துக்களையும் பொறுத்து ஏற்பட்டது. பி.வா.சா.ஆ.30 ஆவணத்தில் கண்டுள்ள அசல் வழக்கு எண்.243/2018 வழக்கில் கண்டுள்ள பொன்னுசாமி என்ற நபர் நான்தான் என்றால் ஆமாம் இந்த வழக்கின் வாதி தரப்பினர் அல்ல என்றால் சரிதான்.

8. அதில் வீரம்மாள் தரப்பினராக உள்ளார். மேற்படி வழக்கின் முடிவு என்ன ஆனது என்றால் பாகம் பிரித்துக் கொண்டார்கள். அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி வீரம்மாலுக்கு சொத்துக்கள் ஏதேனும் பிரிந்ததா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி வீரம்மாளின் தாயார் தான் ராமாயி அம்மாள் என்றால் சரிதான்.ராமாயி அம்மாள் என்பவருக்கு சுயசிதமாக பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து தன் மகள் வீரம்மாலுக்கு கிரையம் கொடுத்துள்ளதால் அந்த சொத்துக்களுக்கும் அசல் வழக்கு எண்.243/2018 வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

9. அசல் வழக்கு எண்.243/2018 வழக்கானது க.ச.எண்.1184 பூமியின் மொத்த விஸ்தீரணமான 9 ஏக்கர் 62 சென்ட் நிலத்தில் 2-¾ ஏக்கர்

நிலத்தை பொருத்து மட்டும்தான் வழக்கு போடப்பட்டதா என்றால் நாச்சிமுத்து நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து மட்டும் போடப்பட்டது. 1181 காலைக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். 1945 இல் ராமாயம்மாள் காலத்தில் இருந்து பின்னிட்டு இராமாயி என்பவரின் மகள் வீரம்மாள் குடியிருந்தும், அதன் பின்னிட்டு இந்த வழக்கின் வாதி குடியிருந்து மின் இணைப்பு பெற்று வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றும் அதன் பின்னிட்டு நிழலி கிராமம், வஞ்சிபாளையம் வசித்து வருகிறார் என்றும், என் சகோதரர் அதை பயன்படுத்திக் கொண்டு மின் இணைப்பு மற்றும் வீட்டு வரி ஆகியவைகளை என் சகோதரர் பெயரில் பெயர் மாற்றம் செய்து கொண்டுள்ளார் என்றும் இந்த விபரம் தெரிந்தவாதி பெயர் மாற்றங்களை ரத்து செய்து தற்சமயம் தன் பெயரில் வரி கட்டணங்கள் செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

10. இந்த வழக்கு விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்று இந்த வழக்கின் பிரதிவாதி எனது சகோதரர் என்பதால் அவர் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி இந்த வழக்கு தீர்ப்பாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.09.18 18:27:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்